# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காஞ்சிபுரம்.

# O.S.No.23/2022

**2023 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 5 ஆம் நாள் வாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1879 ஆம் ஆண்டின் 10-வது சட்ட விதிகளின் படி திரு.சீனிவாசன், Grade III Bench Clerk அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்விக்கப்பட்டது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர் •** | **:** | **ஆறுமுகம்** | **தொழில்•** | **:** | |
| **தந்தை பெயர்•** | **:** | **அப்பாகண்ணு** | **கிராமம்•** | **:** | |
| **வயது •** | **:** | **75** | **வட்டம் •** | **:** | **காஞ்சிபுரம்** |
| **நேரம் •** | **:** | **முற்பகல் 11.58 முதல் 12.05 வரை** | **•** | **:** | |

**வ.சா.1 முதல் விசாரணை**

நான் இந்த வழக்கின் வாதி ஆவேன். என்னுடைய சாட்சியத்தை சத்திய பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள கையொப்பங்கள் என்னுடையது. அதிலுள்ள சங்கதிகள் நான் சொல்லி எனது வழக்கறிஞரால் தயார் செய்யப்பட்டது. கடந்த 28.06.1985 தேதியிட்ட எனது தந்தை எனக்கு எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணத்தின் சான்றிட்ட நகலினை தாக்கல் செய்கிறேன். **அந்த செட்டில் மெண்ட் ஆவணம் வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** கடந்த 13.12.2021 தேதியிட்ட தாவா சொத்திற்கு என் பெயரில் உள்ள பட்டா ( கணிணி மூலம் பதிவிறக்கம் செய்யப்பட்டது) தாக்கல் செய்கிறேன், **அந்த கணிணி பட்டா வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** தாவாப்படி தீர்ப்பாக வேண்டுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

ஒ/ப.ஆர்.இராஜேஸ்வரி
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி
காஞ்சிபுரம்